மாலை முரசு

பக்கங்கள் 13+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 19 சனிக்கிழமை 06.12.2025 | அதிர்வு 129

## டிசம்பர் 19 ஆம் திகதி விசேட சபை அமர்வு



இலங்கை நாடாளுமன்றம் எதிர்வரும் 19 ஆம் திகதி கூடவுள்ளது.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குரிய 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ரூ. 25,000 கொடுப்பனவு யாருக்குக் கிடைக்கும்?

## முழு விவரம் வெளியீடு

**இலங்கையில் பாரிய அனர்த்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்குவதற்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதலைத் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மூலம் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.** 02

## சாவு எண்ணிக்கை 611 ஆக அதிகரிப்பு!

### *213 பேர் மாயம்*



இலங்கையை உலுக்கிய இயற்கைப் பேரிடரால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 611 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், 213 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 5 இலட்சத்து 76 ஆயிரத்து 626 குடும்பங்களைச் சேர்ந்த 20 இலட்சத்து 54 ஆயிரத்து 535 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 33 ஆயிரத்து 622 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 126 பேர் 956 பாதுகாப்பு முகாம்களில்தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

4 ஆயிரத்து 309 வீடுகள் முழுமையாகவும், 69 ஆயிரத்து 635 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள் ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று பிற்பகல் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# கண்டியில் மாத்திரம் 232 பேர் உயிரிழப்பு!

- 81 பேரைக் காணவில்லை
- ஒரு இலட்சத்து 61 ஆயிரத்து 140 பேர் பாதிப்பு
- 1,800 வீடுகள் முழுமையாகச் சேதம்

இலங்கையில் நிலவிய சீரற்ற காலநிலையால் கண்டி மாவட்டத்தில் மாத்திரம் 232 பேர் உயிரிழந்துள்ளனர். 81 பேர் காணாமல்போயுள்ளனர்.

அத்துடன் 51 ஆயிரத்து 98 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 61 ஆயிரத்து 140 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம், மண்சரிவால் 1,800 வீடுகள் முழுமையாகவும், 13 ஆயிரத்து 44 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

8 ஆயிரத்து 992 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 870 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.





# பம்பலப்பிட்டியில் கோர விபத்து!

## ஐவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்!

கொழும்பு, பம்பலப்பிட்டி கடற்கரை வீதியில் இன்று அதிகாலை 2:30 மணியளவில் பாரிய விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் 5 பேர் படுகாயமடைந்து வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெள்ளவத்தை திசையில் இருந்து கொள்ளுப்பிட்டி நோக்கி வேகமாக வந்த லொறி ஒன்று வீதியின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த 2 மோட்டார் வாகனங்கள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் வாகனங்களுடன் மோதிய லொறி ரயில் தண்டவாளத்தில் நின் றுள்ளது.பம்பலப்பிட்டி பொலிஸார் இந்த விபத்து குறித்து மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## ரூ. 25,000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள இந்தச் சுற்றறிக்கையில், பாதிக்கப்பட்ட வீடுகளின் அனைத்து வகைகளுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் பின்வருவன அடங்கும்.

✯ முற்றிலும் சேதமடைந்த வீடுகள்

✯ பகுதியளவில் சேதமடைந்த வீடுகள்

✯ கட்டமைப்புச் சேதம் இல்லாவிட் டாலும் சிறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள்

இந்த வழிகாட்டுதலின்படி, பாதிக் கப்பட்ட ஒவ்வொரு வீட்டுப் பிரிவும் இந்தக் கொடுப்பனவைப் பெறத் தகுதியுடைய தாகும்.

மேலும், நிதியைப் பிரித்துக் கொடுப் பதற்கு முன்னர் சேத மதிப்பீடு எதுவும் தேவையில்லை.

இது தொடர்பில் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் வலியு றுத்தியுள்ளதாவது, காணி அல்லது சொத்துரிமை எதைப் பற்றியும் கருத்தில் கொள்ளாமல் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

இது பின்வருவனவற்றையும் உள் ளடக்கும்.

✯ நிரந்தர குடியிருப்பாளர்கள்

✯ தோட்ட வீடுகளில் வசிப்பவர்கள்

✯ வாடகை வீடுகளில் உள்ள குத்த கைதாரர்கள்

✯ அங்கீகரிக்கப்படாத கட்டமைப்பு களில் வசிப்பவர்கள்

✯ அரச வீடுகளில் வசிப்பவர்கள்

✯ அரசால் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மையங்கள்

ஒரே வீட்டுப் பிரிவில் பல குடும்பங்கள் அல்லது தனிநபர்கள் வசிக்கும் பட்சத்தில் 25 ஆயிரம் தொகையை அவர்களுக்கு இடையே சமமாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று வழிகாட்டுதல் கூறுகின்றது.

வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்களில், கொடுப்பனவு குத்தகைதாரருக்கு மட்டுமே வழங்கப்படும்.

பல குத்தகைதாரர்கள் இருந்தால், தொகையைச் சமமாகப் பிரித்து வழங்க வேண்டும்.

வீட்டின் உரிமையாளரும் குத்தகை தாரர்களும் ஒரே வீட்டில் வசிக்கும் பட் சத்தில், அந்தத் தொகையை அனைத்து தரப்பினருக்கும் இடையில் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

இந்தக் கொடுப்பனவு, 2025 நவம்பர் 21 முதல் ஏற்பட்ட குறிப்பிட்ட அனர்த்தத் துக்கு மட்டுமே பொருந்தக்கூடிய ஒரு முறை கொடுப்பனவாகும்.

முழுத் தொகையும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரே தவணையில் வழங்கப்பட வேண்டும்.

வீட்டுச் சேதங்களை மதிப்பிட்டு, தேவையான ஏற்பாடுகளை உடனடியாகக் கோருமாறு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு உத்தர விடப்பட் டுள்ளது.

---

## டிசம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி உள்ளிட்ட அவசரகாலச் செயற் பாடுகளுக்கு நிதி கோரி முன்வைக் கப்பட்டுள்ள குறைநிரப்பு பிரேரணையை அங்கீகரித்துக்கொள்வதற்காகவே இந்த விசேட சபை அமர்வு இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்ற வரவு – செலவுத் திட்டக் கூட்டத் தொடர் நேற்றுடன் நிறை வுக்கு வந்தது.

இதையடுத்து அடுத்த வருடம் ஜனவரி 6 ஆம் திகதியே நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்குத் திட்டமிடப்பட்டி ருந்தது.

எனினும், குறைநிரப்புப் பிரேர ணைக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி யைப் பெறும் நோக்கிலேயே எதிர்வரும் 19 ஆம் திகதி சபை கூட்டப்படுகின்றது.

விசேட நாடாளுமன்ற அமர்வைக் கூட்டுமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்து, அதற்குரிய நடவடிக்கையை முன்னெடுப்பதற்குரிய உரிமை, அரச மைப்பின் பிரகாரம் பிரதமருக்கு உள் ளமை குறிப்பிடத்தக்கது.

# நெருக்கடியான சூழ்நிலையில் வதந்திகளைப் பரப்பாதீர்கள்!

## எதிர்க்கட்சிகளிடம் அரசு வலியுறுத்து

"இலங்கை நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கின்றது. இந்த நிலைமையில் போலித் தகவல்களைப் பரப்பும் சந்தர்ப்பவாத அரசியலை எதிர்க்கட்சிகள் கைவிட வேண்டும்."

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,



"போலித் தகவல்களைப் பரப்பாமல் இருப்பதுதான் தற்போதைய சூழ்நிலையில் எதிரணிகள் செய்யும் சிறந்த சேவையாக இருக்கும். அதேபோல் சந்தர்ப்பவாத அரசியலை கைவிட்டு விட்டு நாட்டை மீட்க ஒன்றுபட வேண்டும்.

அத்துடன், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

ஆபத்தான பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களை அங்கு குடியமர்த்தாமல் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவது பற்றி அவதானம் செலுத்தப்பட்டுள்ளது." – என்றார்.

# யாழ். பிரதி மேயர் ஒரு மாதக் கொடுப்பனவை அனர்த்த நிவாரணத்துக்காக வழங்கினார்!

இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் டித்வா புயலால் பல குடும்பங்கள் பெரும் நாசத்தையும் இழப்புகளையும் சந்தித்துள்ளன. இந்நிலையிலே, பாதிக்கப்பட்ட மக்களின் துயரை பகிர்ந்து கொள்ளும் விதமாக யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி முதல்வர் இ. தயாளன் தனது ஒரு மாதக் கொடுப்பனவை அனர்த்த நிவாரணத்துக்கு வழங்கியுள்ளார்.



தனக்கு வழங்கப்படும் இந்த மாதத்துக்கான முழு கொடுப்பனவையும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்போதைய சூழலில் மக்களின் துன்பத்தை குறைப்பது தான் முதன்மை. என்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த மாத கொடுப்பனவை முழுமையாக நிவாரணத்துக்காக ஒதுக்குகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# அனர்த்தங்களால் தேயிலைத் தொழில் கடுமையாகப் பாதிப்பு



இலங்கையில் கடந்த வாரம் ஏற்பட்ட அனர்த்த நிலைமையைத் தொடர்ந்து, தேயிலைத் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த இயந்திரங்களைப் பழுது பார்க்க வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டியிருப்பதாலும், வீதிகளில் ஏற்பட்ட சேதம் தேயிலை ஏற்றுமதியை பாதிக்கக்கூடும் எனவும் கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் தேயிலைத் தொழில் இயல்பு நிலைக்குத் திரும்ப பல மாதங்கள் ஆகலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேயிலை பைகளை உற்பத்தி செய்யும் இயந்திரங்களும் சேதமடைந்துள்ளன. முழு ஆய்வுக்குப் பின்னர், மொத்த சேதம் மதிப்பிடப்படும் என்று கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் லுஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார். அதை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு அரசு உதவி அளிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அநுரவின் தெளிவுபடுத்தல்

பேரிடர் ஏற்பட்ட போதும், அந்த அனர்த்தத்தை எதிர்கொள்வதில் உள்ள சிக்கல்களை சமாளிப்பதற்கு அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்துங்கள் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்திய போதிலும் அதனை செய்வதற்கு ஆரம்பத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பின்னடித்தார்.

எனினும், வெள்ளம் மற்றும் மண் சரிவுகள் போன்றவற்றினால் பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களில் இருந்து மக்களை பலவந்தப்படுத்தியேனும் வெளியேற்றுவதற்கு அவசர காலநிலை தவிர்க்க முடியாத கட்டாயம் என்ற நிலையிலேயே கடைசியில் அதனை அவர் பிரகடனப்படுத்தினார்.

ஆனால் அந்தப் பிரகடனத்தை ஒட்டி அவரது அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி மற்றும் அரசாங்க அமைச்சர்களைக் குறிவைத்து சமூக ஊடகங்களில் தவறான அல்லது தீங்கிழைக்கும் உள்ளடக்கத்தைப் பரப்பினர் என்று கூறப்படும் வெளிநாட்டினர் உட்பட தனிநபர்களுக்கு எதிராக அவசரகாலச் சட்ட விதிகளைப் பயன்படுத்துமாறு பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சுனில் வட்டகல பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டமையைத் தொடர்ந்தே நெருக்கடிகள் எழுந்தன.

அவசரகால விதிகளைப் பயன்படுத்தி அரசு மக்களினதும் ஊடகங்களினதும் அடிப்படை உரிமையான கருத்து வெளியிடும் சுதந்திரத்தை நசுக்க முற்படுகின்றது என்று அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளும் ஊடகத்தரப்புக்களும் கிளர்ந்தெழுந்தன.

ஏற்கனவே எதிரணியில் நீண்ட காலம் இருந்த சமயம் அவசரகாலச் சட்ட விதிகளை ஆளும் தரப்புக்கள் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக பிரயோகித்து வந்தமையை அந்தந்தக் காலங்களில் கடுமையாக எதிர்த்து விமர்சித்து வந்தவர் இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

இப்படி அவசரகால விதிகளை கருத்துச்சுதந்திரத்தை அடக்குவதற்கான வழியாகப் பயன்படுத்தினால் தமது அரசுக்கு எதிர்காலத்தில் நேரக்கூடிய பெரும் பாதிப்பை உணர்ந்து கொண்டுள்ள ஜனாதிபதி உடனடியாகவே நிலைமையை திருத்தும் அறிவிப்பை நேற்றுத் தமது நாடாளுமன்ற உரையில் விடுத்திருக்கிறார்.

அவசரகாலச் சட்டங்கள் அரசாங்கத்தை நோக்கிய விமர்சனங்களையோ அல்லது கருத்துச் சுதந்திரத்தையோ நசுக்கப் பயன்படுத்தப்பட மாட்ட என்று அவர் நாடாளுமன்றத்தில் உறுதியளித்திருக்கின்றார்.

தங்களுக்கு எதிராக வெளியிடப்படும் விமர்சன அல்லது சாதகமற்ற கருத்துகளால் தானோ அல்லது தனது நிர்வாகமோ கவலைப்படுவதில்லை என்றும், தேவைப்பட்டால் அவதூறான உள்ளடக்கத்தைக் கையாள தற்போதுள்ள சட்டங்கள் போதுமானவை என்றும் அவர் கூறினார்.

இருப்பினும், பொதுநல்லிணக்கத்தை சீர்குலைப்பவர்கள், பேரிடர்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களிடையே அச்சத்தை பரப்புபவர்கள் அல்லது நிவாரண நடவடிக்கைகளில் தலையிடுபவர்கள் எவருக்கும் எதிராக அவசர காலச் சட்டங்கள் கடுமையாக அமுல் படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க எச்சரித்தார். ஒரு தேசிய நெருக்கடியின் போது சமூகத்தை சீர்குலைக்கும் முயற்சிகளாக இது போன்ற செயல்கள் கருதப்படும் என்று அவர் குறிப்பிட்டுளார்.

"கருத்துக்கள் அல்லது விமர்சனங்களை அடக்குவதற்கு நாங்கள் ஒருபோதும் அவசரகாலச் சட்டங்களைப் பயன்படுத்த மாட்டோம். என்னை தனிப்பட்ட முறையில் குறிவைத்து அவதூறான கருத்துக்கள் இருந்தால், நான் முன்பு கூறியது போல், அவை சாதாரண சட்டங்களின் கீழ் கையாளப்படும்" என்று அவர் கூறினார்.

அதன்படி அவரது அரசு ஒழுகும் என்று நம்புவோம்.




# மூதூரில் பிரதான குடிதண்ணீர் குழாய் இணைக்கும் பாரிய பணி முன்னெடுப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் - நீலாபொல பகுதியில் இருந்து மூதூர் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு நீரை கொண்டு செல்லும் பாரிய குழாயானது அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் உடைக்கப்பட்டு சுமார் 150 மீற்றருக்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இதனை இழுத்து கொண்டு வந்து இணைக்கும் பணி தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக திணைக்கள ஊழியர்கள் படையினர் கட்டைபறிச்சான், மூதூர், அம்மன் நகர், கங்குவேலி உள்ளிட்ட அண்மைக் கிராமங்களில் உள்ள மக்கள் உட்பட 200 இற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது சீரமைக்கப்பட்ட பின்னர் மிக விரைவில் நீர் கொண்டு செல்லப்பட்டு நீர் சுத்திகரிக்கப்பட்டு விரைவாக மூதூருக்கான குடிநீர் விநியோகம் மீளவும் இடம்பெறும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச சபையின் மூதூர் பொறுப்பதிகாரி கூறினார்.

கடந்த 9 தினங்களாக மூதூருக்கான குடிநீர் வழங்கல் முற்றாக தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஜெனரேட்டரில் கசிந்த விசவாயு;

# மரணமடைந்த குடும்பப் பெண்ணின் சடலம் உறவினர்களிடம் கையளிப்பு

(பாறுக் ஷிஹான்)

வீடு ஒன்றினுள் இயங்கிய நிலையில் ஜெனரேட்டரில்இருந்துவெளியாகியநச்சு வாயுவை சுவாசித்த நிலையில் உயிரிழந்துள்ளார் என்று சந்தேகிக்கப்படும் குடும்பப் பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் இன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்முனைக் குடி 5 பிரிவு புதிய வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் அந்தச் சமயம் இருந்த தாய்,தந்தை,மகள்ஆகியோர்இவ்வனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களாவர். வழமை போன்று தனது பெற்றோர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை எழும்பவில்லை என சந்தேகமடைந்த மகள் உடனடியாக தனது உறவினர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதன்போது குறித்த வீட்டில் இருந்த ஜெனரேட்டரில் இருந்து கசிந்த வாயுவால் ஏதோ இடம்பெற்றுள்ளது என்பதை உணர்ந்த நிலையில் உரிய தரப்பினருக்கு அறிவித்துள்ளனர்.

இவ்வனர்த்தத்தில் புதிய வீதியில் வசித்துவந்த54வயதுடையகுடும்பபெண்ணான அலியார் பஸ்மிலா என்பவரே மரணமடைந்தவராவார்.

காபன் மொனொக்சைட் காற்றுடன் கலந்து நஞ்சாகியதால் அதை சுவாசித்த நிலையில் குறித்த பெண்ணின் மரணம் சம்பவித்துள்ளது என்று தெரிவித்து மரண விசாரணை மற்றும் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு உயிரிழந்த குடும்ப பெண்ணின் மரணம் தொடர்பில் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஏ.எல். லசந்த களுஆராச்சி வேண்டுகோளுக்கு இணங்க சட்ட வைத்திய அதிகாரி கசுன் பெரேரா பங்கேற்புடன் மரண விசாரணை அதிகாரி முகமட் இப்றாகீம் நஸ்றுல் இஸ்லாம் முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்றன.

இதேவேளை கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் குறித்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் தந்தை, மகள் ஆகியோர் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# சுத்தமான குடிநீரின்றி வாழ்ந்த மக்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் வழங்க நடவடிக்கை

(மட்டக்களப்பு நிருபர்)

சுத்தமான குடிநீரின்றி வாழ்ந்த மக்களுக்கு குழாய் மூலமான குடிநீரைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட பாலையடி வட்டாரத்துக்கு இதுவரைகாலமும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் வழங்கப்படும் குழாய் மூலமான சுத்தமான குடிநீரின்றி அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அப்பகுதி மக்களின் வேட்டுகோளிற்கிணங்க போதீவுப் பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் விமலநாதன் மதிமேனன் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் தொடர்பு கொண்டு அப்பகுதி மக்களுக்கு மிக விரைவில் குடிநீரைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்கிணங்க அப்பகுதி மக்கள் குழாய் மூலமான குடிநீரைப் பெறுவதற்காக இணைப்புக்களைப் பெறுவதற்காக போரதீவுப் பற்றுப் பிரதேச சபையின் பெக்கோ இயந்திரம் மூலம் அகழி வெட்டிக் கொடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அங்குள்ள மக்கள் குழாய் மூலமான குடிநீர் இணைப்பைப் பெறுவதற்கு உரிய விண்ணப்ப படிவங்கள் நேற்று வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது உப தவிசாளர் எஸ்.கயசீலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தாம் அப்பகுதியில் குடியிருந்த காலமிருந்து இன்றுவரையில் சுத்தமான குடிநீரின்றி வாழ்ந்து வந்த நிலையில் தமது இந்தப் பிரச்சினைக்குத் தற்போதைய மழை காலத்திலேயே தீர்வு பெற்றுத்தந்த போரதீவுப் பற்றுப் பிரதேச சபைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## மூதூரில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு

# தம்பலகாமம் பிரதேச செயலகம் ஊடாக குடிதண்ணீர் வழங்கி வைப்பு!



(ஹஸ்பர் ஏ.எச்.)

சீரற்ற கால நிலையால் ஏற்பட்ட பெரும் பாதிப்புக்களை மூதூர் பகுதியினர் எதிர்கொண்டனர். தற்போது வெள்ள நீர் வடிந்ததன் பின்பும் மக்கள் குடிநீரை பெற்றுக் கொள்வதில் பல சிக்கல்களை எதிர்கொண்டுவரும் நிலையில் தம்பலகாமம் பிரதேச செயலகம் ஊடாக குடி நீர் பவுசர் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு நேற்று மூதூர் பகுதி மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்கக் குடி நீர் பவுசர் மூலமாக சுமார் பத்தாயிரம் லீற்றர் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இறால் குழி, நடுத்தீவு உள்ளிட்ட மக்களுக்காக வழங்கி வைக்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் தலைமையிலான சக உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று குடிநீரை வழங்கினர்.

வெள்ள அனர்த்தம் காரணமாக மிக மோசமாக பாதிப்படைந்த மக்களின் தேவையாக குடி நீர் தட்டுப்பாடும் நிலவி வரும் நிலையில் குடி நீர் வழங்கப்பட்டுள்ளது.



# மன்னார் பனங்கட்டு கொட்டு மீனவர்கள் கைவிடப்பட்ட நிலையில் கவலை தெரிவிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாடு முழுவதும் அண்மையில் பாரிய உயிர்ச் சேதங்களையும் பொருள் சேதங்களையும் ஏற்படுத்திச் சென்ற புயலால் மன்னார் மாவட்ட மீனவர்களும் பாரிய பாதிப்பை எதிர்கொண்டுள்ள போதும் இதுவரை யாரும் தம்மை வந்து பார்த்து தமக்கு எவ்வித உதவிகளும் வழங்க முன்வரவில்லை என மன்னார் பனங்கட்டு கொட்டு மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பாதிப்புகளை எதிர் கொண்டுள்ள மன்னார் மாவட்ட மீனவர்கள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், மீன்பிடி திணைக்கள அதிகாரிகள் யாரும் வந்து தம்மைப் பார்த்து பாதிப்புகள் தொடர்பாகக் கேட்கவில்லை என்றும் எந்த ஒரு நிவாரணங்களும் தரவில்லை என்றும் புயலின் பின்னர் நாங்கள் அரசால் கைவிடப்பட்டுள்ளது போல் உணர்கிறோம் எனவும் குறித்த மீனவர்கள் தெரிவித்தார்கள்.

ஒவ்வொரு நாளும் தொழிலுக்குச் சென்றால் மட்டுமே எங்களுக்குச் சாப்பாடு. இனி ஒரு மாசத்துக்குக் கடலில் தொழிலுக்குச் செல்ல இயலாத நிலையில் உள்ளோம்.

எந்த அரச நிறுவனம், அமைச்சர்கள், ஆளுநர், அதிகாரிகள் எம்மை வந்து சந்திக்கவும் இல்லை. எங்களுடைய குறைகளை கேட்கவும் இல்லை அன்றாட உணவுக்கு பெரும் சிரமப்படும் நிலையில் எமது மீனவர்கள் இருக்கிறார்கள்.

கடந்த புயல் வெள்ளத்தின்போது எமது படகுகளை கொண்டு சென்று எத்தனை நபர்களை காப்பாற்றிய எம்மை காப்பாற்றுவதற்கு எவரும் இல்லை.

மழை நீரில் அடித்து வரப்பட்ட ஆடு, மாடு விலங்குகள் மனித உடல்கள் போன்ற கழிவுகள் எல்லாம் எமது கடல் பகுதியில் நிறைந்து காணப்படுகிறது.

அதனால் எமது மீனவர்கள் தொழிலுக்கு போவதில்லை. இவ்வாறு சென்றாலும் மீன் கிடைப்பதில்லை. கடல் முழுவதும் சாக்கடை போல் காட்சி அளிக்கிறது. எமது படகுகள், வலைகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

மீனவ மக்களுக்கு எங்களது சங்கத்தின் மூலம் நாங்கள் கடன் எடுத்துக் கொடுத்திருக்கின்றோம். அவர்களுக்கு உரிய தொழில் எல்லாம் இந்த புயலால் நிர்மூலம் ஆகியுள்ளது. ஆகவே அந்த கடனை அவர்கள் எவ்வாறு கட்டப் போகிறார்கள். அவர்களது குடும்பத்துக்கு ஒவ்வொரு நாளும் எவ்வாறு உணவு கொடுக்கப் போகிறார்கள் என்பது எமக்கு தெரியவில்லை என அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புயல் வெள்ளத்தில் இறந்தவர்களை விட மன்னாரில் மீனவ மக்கள் பட்டினியால் சாகப் போகிறார்கள். அப்படி ஒரு நிலைமைக்கு எமது மக்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

எனவே அரசு இதைக் கருத்தில் கொண்டு எமது மக்களுக்கு நிவாரணத்தை விரைவாக கொடுக்க வேண்டும். கடல் தொழில் அமைச்சர், அரச அதிகாரிகளோ மீன்பிடி திணைக்கள அதிகாரிகள் எம்மை வந்து சந்தித்து எமது மீனவர்களின் குறைகளை தீர்த்து வைக்க வேண்டும்.– என்று தெரிவித்தனர்.

# 135 குடும்பங்களுக்கு அத்தியவசியமான உணவுப்பொருள் வழங்கிய ஆச்சிரமத்தால்

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 135 குடும்பங்களுக்கு 371,000 ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருளான அரிசி வழங்கப்பட்டது.

குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்ப 15 கிலோ, 12 கிலோ, 10 கிலோ, 07 கிலோ என்ற அடிப்படையில், வெள்ளிக் கிழமை இது வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கி வைத்தார்.

இந்த உதவித் திட்டம் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## யாழ்ப்பாணத்தின் அமைதித் தேடல்;

# வரணி கிராமத்தில் ஒரு மறக்க முடியாத பயணம்...!



அம்சன் கிருஸ்ணா,
ஊடகக்கற்கைகள் துறை,
3 ஆம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணத்தின் பரபரப்பான நகர வாழ்விலிருந்து சற்று விலகி, தென்மராட்சியின் பசுமையான இதயப் பகுதிக்கு ஒரு அமைதித் தேடலுடன் நான் பயணத்தைத் தொடங்கினேன்.

சாவகச்சேரிக்குக்கிழக்கேஅமைந்திருக்கும் வரணி கிராமமே எனது இலக்கு. இலங்கையின் வட மாகாணத்தில், யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மராட்சிப் பிரிவில், சாவகச்சேரிப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இந்த வேளாண்மை மையத்தைப் பற்றி நான் அறிந்த தகவல்கள், எனது ஆர்வத்தை மேலும் தூண்டின.

வரணியை நோக்கிய எனது பயணம், ஒரு சாதாரண பயணமல்ல் அது ஒரு இசையும் இயற்கையும் இணைந்த அனுபவமாக அமைந்தது. நான் பயணித்த பஸ்ஸில், ஜன்னல் வழியாக வீசிய இயற்கைக் காற்று, கிராமியப் பயணத்தின் இதத்தை உள்ளே கடத்தியது. அப்போது, தேவாவின் இனிமையான இசையில் அமைந்த, 'ராசிதான் கை ராசிதான்' என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்தப் பாடலில் வரும், 'வீசுற காற்றும் வயல்வெளி நாற்றும் படிக்குது இசை பாட்டு' என்ற வரிகள், நான் கண்டுகொண்டிருந்த காட்சிகளோடு அத்தனை கச்சிதமாகப் பொருந்திப் போயின. வயல்வெளிகளின் நாற்றமும், நெஞ்சைத் தழுவிய குளிர்ந்த காற்றும் சேர்ந்து, வரணியின் சூழலை மேலும் வசீகரம் மிக்கதாக மாற்றியிருந்தது.

வரணியின் எல்லைக்குள் நுழைந்த கணம், மனதுக்கு இதமளிக்கும் ஒரு பச்சை நிறப் போர்வை என்னைச் சூழ்ந்தது. இது ஒரு சாதாரண கிராமம் அல்ல் ஆழமான வரலாற்றுப் பின்னணியையும், தனித்துவமான கலாசாரத்தையும், விவசாயச் செழுமையையும் தன்னகத்தே கொண்ட ஒரு பொக்கிஷம் என்பதை உடனடியாக உணர முடிந்தது. நிலப்பரப்பு சமதளமாகவும், மணல் மண்ணைக் கொண்டிருப்பதாலும், சுண்டிக்குளத்துக்கும் குடாவுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் விவசாயமே இங்கு உயிர் நாடியாகத் திகழ்ந்தது.

கிராமிய மக்கள் கிணறுகளை ஆதாரமாகக் கொண்டு, உவர்ப்புத் தன்மை கொண்ட நீருக்கேற்ற பயிர் வகைகளைத் தெரிவு செய்து, பாரம்பரிய விவசாய முறைகளைப் பின்பற்றி நிலத்தைப் பொன்னாக்கி வருவது, அவர்களின் கடின உழைப்பையும், இயற்கையோடு இணைந்த வாழ்வியலையும் எடுத்துக்காட்டியது.

ஆங்காங்கே தென்னந்தோப்புகளும், பற்றைக் காடுகளும், சிறு குளங்களும் வரணியின் பௌதீக அமைப்பை மேலும் அழகுபடுத்த, உழவு நிலத்தின் வாசம் எனது பயணக் களைப்பை நீக்கியது. வரணியின் தெற்கு எல்லை யாழ்ப்பாணக் கடல் நீரேரியைத் தொடும் காட்சிகளைக் கண்டபோது, இங்குள்ள நீர்நிலை சார் வாழ்வியலின் தாக்கத்தையும், சூழலின் அமைதியையும் முழுமையாக உணர முடிந்தது.

அடுத்ததாக, வரணியின் ஆன்மீகச் செழுமையைக் கண்டு களிக்க நான் சென்றேன். வரணி அதன் தனித்துவமான பண்பாடு மற்றும் மரபுகளுக்குப் பெயர் பெற்றது என்பதை நான் அறிவேன்.

தென்மராட்சிப் பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான வரணி தில்லையம்பலப் பிள்ளையார் கோவில், எனது பயணத்தின் முக்கிய ஈர்ப்பாக இருந்தது. தொன்மை மிக்க இந்தக் கோயிலின் மணி ஓசை, அமைதியான கிராமத்தில் ஒரு ஆழ்ந்த பக்தியுணர்வைக் கடத்தியது. இந்தக் கோயில் வெறும் வழிபாட்டுத் தலமாக மட்டுமன்றி, வரணி மக்களின் சமய வாழ்க்கையின் மையமாகவும், வரலாற்றின் உயிர்த்துடிப்புள்ள சான்றாகவும் விளங்குவதை உணர்ந்தேன். அதோடுமட்டுமல்லாமல், கிராமத்தின் நாவற்காடு பகுதியில் அமைந்திருக்கும் கயாமரவை வைரவர் கோவில் மற்றும் சிட்டிவேரம் அம்மன் கோவில் போன்ற பழைமை வாய்ந்த ஆலயங்களும், இந்தப் பிரதேசத்தின் தனித்துவமான சிறு தெய்வ வழிபாட்டு மரபுகளைப் பறைசாற்றின. இந்த ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் மற்றும் சடங்குகள், வரணி மக்களின் கலாசாரப் பிணைப்பை வெளிப்படுத்துகின்றன. தொழிற்சார்ந்த பெயர்கள், தொல்பொருட்சொற்கள் மற்றும் ஆலயப் பெயர்கள் இங்குள்ள வரலாற்றுப் பின்னணியை உணர்த்துகின்றன என்பது, இங்குள்ள ஒவ்வொரு பெயருக்குப் பின்னாலும் ஒரு கதை இருப்பதை எனக்கு உணர்த்தியது.

வரணியின் வரலாற்றைப் பற்றி கிராம மக்களிடம் விசாரித்தபோது, சில சுவாரஸ்யமான தகவல்கள் கிடைத்தன. முற்காலத்தில் மக்கள் வேளாண்மையில் அதிக கவனம் செலுத்தியதால், கல்வி வளர்ச்சி ஆரம்பத்தில் பின்தங்கியிருந்ததை அவர்கள் உறுதிப்படுத்தினர். அக்காலங்களில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தவர்கள், சாவகச்சேரி அல்லது யாழ்ப்பாணம் சென்று கல்வி கற்ற வரலாறு உண்டு. எனினும், வரலாற்றின் ஒரு காலகட்டத்தில், ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களுடன் இணைந்த பாடசாலைகள் மூலம் கல்வி வளர்ச்சியடையத் தொடங்கியது. தற்போது கல்வி பின்தங்கிய நிலையில் இருந்து முன்னேறிவரும் ஒரு பகுதியாக வரணி மாறியுள்ளது. அண்மைக் காலங்களில், கழிவிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வது போன்ற நவீன திட்டங்களும் இங்கு முன்வைக்கப்பட்டு வருவதைக் கேட்டபோது, இந்த கிராமம் தன் பாரம்பரியத்தை விட்டுவிடாமல், நவீன மாற்றங்களை வரவேற்கத் தயாராக இருப்பதைக் கண்டேன்.

குடமியன், நாவற்காடு, மாசேரி, இடைக்குறிச்சி போன்ற உட்பிரிவுகளைக் கடந்து சென்றபோது, ஒவ்வொரு கிராமமும் தனித்தனி அடையாளத்துடனும், மக்கள் சமூகத்துடனும் தென்மராட்சியின் அழகை நிறைவு செய்வதைக் கண்டேன்.

வரணியின் பண்பாட்டு மரபுகளைப் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது, இந்த கிராமத்தின் முக்கியத்துவத்தை மேலும் உயர்த்தியது. எனது வரணிப் பயணம், வெறும் இடங்களைச் சுற்றிப் பார்ப்பதாக இல்லாமல், யாழ்ப்பாணத்தின் நகரமயமாக்கப்படாத, தூய்மையான கிராமிய வாழ்வியலுக்குள் ஒரு ஆழமான பயணம் மேற்கொண்ட அனுபவமாக அமைந்தது. ஆலயங்களின் மணி ஓசையும், உழவு நிலத்தின் சுவாசமும், அந்த பஸ் பயணத்தில் நான் கேட்ட பாடலின் வரிகளும், அமைதியான மக்களின் இயல்பும் சேர்ந்து, வரணியை நான் மறக்க முடியாத ஒரு நினைவாக எனது மனதில் பதித்தது. தென்மராட்சியின் ஆன்மீக, விவசாயச் செழுமையைக் கண்டு களிக்க விரும்பும் எவருக்கும் வரணி கிராமம் ஒரு அரிய அனுபவத்தை நிச்சயம் அளிக்கும்.





# மண்மேடுகளை அகற்றக் கோரிக்கை!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இலங்கையைத் தாக்கிய பேரழிவு வெள்ளத்தால் ஏற்பட்ட மண்சரிவுகளில் பாதிக்கப்பட்ட ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை, பத்தனை மற்றும் டெவோன் பகுதிகளில் பாரிய மண்மேடுகள் பிரதான வீதியில் சரிந்து விழுந்துள்ளன.

அவற்றை அகற்றி வீதியை சரி செய்யும் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட எந்தவொரு திணைக்களமும் இதுவரை முன்வரவில்லை என்று வாகன சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் வாகனங்களை செலுத்த இவ்வாறான சில இடங்களில் ஒரு வழி போக்குவரத்தே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்த வீதியில் சரிந்து விழுந்து கிடக்கும் பாரிய மண்மேடுகளை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாகன சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தபாலகத்துக்குரிய நிரந்தர கட்டடத்தை அரசு அமைத்து வழங்க வேண்டும்!

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு



(பா.சதீசன்)

தபாலகத்திற்குரிய நிரந்தர கட்டடத்தை அரசு அமைத்து வழங்க வேண்டும். அவ்வாறு வழங்காது விடின் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்படும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் குமாரவேலு அகிலன் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு தபால் நிலையத்துக்குச் சொந்தமான அரச காணியிருந்தும் 13 வருடங்கள் கடந்தும் இதுவரை எதுவித கட்டுமான பணிகளும் மேற்கொள்ளவில்லை. இருப்பினும் இன்று காலை தபால் ஊழியர்கள் குறித்த காணியைத் துப்பரவு செய்திருந்தார்கள். குறித்த பணியின்பின்னர்ஊடகங்களுக்குகருத்து தெரிவித்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக வீதியில் அஞ்சல் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட காணி யுத்தத்துக்குப் பின்னர் 13 வருடங்களாகத் துப்பரவு செய்யப்படாமல் எவ்வித கட்டுமான பணிகளும் இடம்பெறாமல் இருக்கிறது. அதனால் காணி பற்றையாக காணப்படுவதோடு இந்தக் காணிக்கு அருகாமை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குசொந்தமானவாய்க்கால் சீராக புனரமைக்கப்படாமல் இருக்கின்றது என மக்கள் பிரதேசசபைக்கு முறைப்பாடு வழங்கியிருந்தனர். அதற்கமைய தபாலக ஊழியர்கள் அஞ்சல் திணைக்களத்துக்கு உரிய காணியை இன்றையதினம் துப்பரவு செய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு தபாலகமானது 9 இடங்களில் இடமாறியிருக்கின்றது. புதுக்குடியிருப்பு தபாலகம் உப தபாலகமாக இருந்து 2006ஆம் ஆண்டு தபாலகமாக மாற்றம் பெற்றிருந்தது. இதன் கீழ் ஆனந்தபுரம், உடையார்கட்டு, விசுவமடு உப தபாலகங்கள் இயங்கி வருகின்றது. ஆனால் புதுக்குடியிருப்பு தபாலகம் வாடகை கட்டடத்திலேயே தற்போதும் இயங்கி வருகின்றது. இதனால் தபாலகம் அடிக்கடி இடம்மாற வேண்டி இருக்கும். இவ்வாறு இடம் மாறுவதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு இவ்வருடம் நான் கடிதம் ஒன்றை அனுப்பி இருக்கின்றேன். அதற்கு அடுத்த வருடத்திற்குள் கட்டடம் அமைத்து தருவதாகப் பதில் வழங்கப்பட்டுள்ளது. நிரந்தர கட்டடம் ஒன்று அமைத்து கொடுப்பதன் ஊடாக மக்களுக்கும் வேலை செய்யும் பணியாளர்களுக்கும் இடையூறு இருக்காது. அடுத்த வருடம் தபாலகத்துக்கு உரிய நிரந்தர கட்டடங்களை அமைத்து அரசு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்காது விட்டால் மக்களோடு இணைந்து வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படும்.– என்றார்.




# சாவகச்சேரியில் தூர்வாரப்பட்ட குஞ்சர்துரவு இப்போது குளமாக!

## உப தவிசாளர் கிஷோரின் நடவடிக்கையால்

சாவகச்சேரி நகராட்சி மன்றின் உள்ளூராட்சி வார நடமாடும் சேவையின் போது கண்டுபிடிக்கப்பட்டு, உபதவிசாளர் கிஷோரின் முயற்சியால் உடனடியாகவே தூர்வாரப்பட்ட குஞ்சர் துரவு தற்போது நீர் நிரம்பிக் குளம் போல் காணப்படுகின்றது.

நகராட்சி மன்றின் எல்லைக்கு உட்பட்ட மீசாலை கிழக்கு வட்டரத்தின் குஞ்சர் துரவு வீதி குறித்த குளம் அமைந்துள்ள காரணத்தினாலேயே குஞ்சர் துரவு வீதி என அழைக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் குறித்த வீதியில் குளம் அமைந்துள்ளமைக்கான எந்தவிதமான அடையாளமும் காணப்படவில்லை.

குறித்த குளம் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று அப்பகுதி மக்கள் வட்டார உறுப்பினர் பிரகாஸிடம் முறையிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக உறுப்பினர் பிரகாஸ், உபதவிசாளர் கிஷோருக்குத் தெரிவித்ததை அடுத்து நகராட்சி மன்ற தவிசாளர் ஸ்ரீபிரகாஸின் அனுமதியோடு நடமாடும் சேவையின் பொழுது குறித்த குளம் அடையாளம் காணப்பட்டது. நகராட்சி மன்றத்தினரால் அதிரடியாக ஒரே நாளில் தூர்வாரப்பட்டது.

இந்த நிலையில் தற்போது பெய்யும் பருவ மழையால் குறித்த குளம் அதிகளவு நீர் நிரம்பிக் காணப்படுவது அக்கிராம மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நகராட்சிமன்றினதும்உபதவிசாளரினதும் அதிரடியான இந்தச் செயற்பாட்டை அப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றார்.



# பாரிஸ் மாநகரில் நாளை இலக்கிய மாலை பத்து நூல்களின் அறிமுக நிகழ்வு ஒன்றாக

## மூத்த எழுத்தாளர்கள் வி.ரி.இளங்கோவன் - பத்மா இளங்கோவனின் ஆக்கங்கள்






























(இளநிலா)

பாரிஸ் மாநகரில் நாளை நடைபெறவுள்ள இலக்கிய மாலையில் பத்து நூல்களின் அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பாரிஸ் மாநகரில் வாழும் மூத்த எழுத்தாளர்களான வி. ரி.இளங்கோவன் – பத்மா இளங்கோவன் ஆகியோரின் பத்து நூல்கள் அறிமுக நிகழ்வு – இலக்கிய மாலை நாளை 07 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாரிஸ் – லாச்சப்பலுக்கு அருகிலுள்ள “பஜோல்” (HALLE PAJOL) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

“இளங்கோவன் படைப்புகள்”, “ஈழத்து இலக்கியச் சிற்பிகள்”, “வெயிலும் பனியும்”, “போர்க்காலக் கதைகள்“, “மக்கள் எழுத்தாளர் கே. டானியல்“ ஆகிய வி. ரி. இளங்கோவனின் ஐந்து நூல்களும் –

“சிறுவர் தமிழ் அமுதம்”, “சிறுவர் இலக்கிய நுட்பங்கள்”, “சிறுவர் கதைப் பாடல்கள்”, “பாலர் கதைப் பாடல்கள்“, “கொரோனாவின் தடங்களில்.“ ஆகிய பத்மா இளங்கோவனின் ஐந்து நூல்களும் அறிமுக நிகழ்வில் இடம்பெறுகின்றன.

மூத்த கவிஞர், மொழிபெயர்ப்பாளர் க.வாசுதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஊடகவியலாளர் இ. கந்தசாமி, எழுத்தாளர் சு.கருணாநிதி, கலைஞர் கே.பி.லோகதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

கலை, இலக்கியப் படைப்பாளிகளான க.முகுந்தன், என்.கே.துரைசிங்கம், பொலிகை கோகிலா, க.தேவதாசன், பிரியா லவன், கே. உதயகுமார், நிஷா பீரிஸ் ஆகியோர் நூல்கள் குறித்துக் கருத்துரை வழங்குவர்.

ஏற்புரைகளை நூலாசிரியர்கள் வழங்குவர்.

ஊடகவியலாளர் எஸ். கே. ராஜென் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார்.

எழுத்தாளர் வி.ரி.இளங்கோவன் சிறுகதை, கவிதை, கட்டுரை, திறனாய்வு, தமிழர் மருத்துவம் ஆதியாம் துறைகளில் இருபத்திமூன்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். பத்துக்கு மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றுள்ள இவரது நூல்களின் அறிமுக நிகழ்வுகள், இலங்கையின் பல பகுதிகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும், கனடாவிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பத்மா இளங்கோவன் சிறுவர் இலக்கியத்துறையில் குறிப்பிடத்தக்கவர். முன்னாள் ஆசிரியரான இவர், பாலர் கல்வியில் விசேட பயிற்சி பெற்றவர். சிறுவர் இலக்கியம், கவிதை, கட்டுரை ஆதியாம் துறைகளில் பன்னிரண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ்நாடு சின்னப்பபாரதி இலக்கிய அறக்கட்டளையின் சிறுவர் இலக்கியத்திற்கான விருது (2012) பெற்றவர்.

அறிமுக நிகழ்வுக்கான ஒழுங்குகளை, உலகத் தமிழ்க் கலையகம் – பிரான்ஸ், முன்னோடிகள் இலக்கிய வட்டம் – பாரிஸ் ஆகிய அமைப்புகள் மேற்கொண்டுள்ளன.

இலக்கிய மாலை நிகழ்வில், பிரான்ஸ் நாட்டில் வாழும் கலை இலக்கியப் படைப்பாளிகள், இலக்கிய அபிமானிகள், வாசகர்கள் பெருமளவில் கலந்துகொள்வரென எதிர்பார்க்கப்படுகிறது.







# கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு ரஷ்ய அரசு எரிபொருள் விநியோகம்

தமிழ்நாட்டின் கூடங்குளம் அணு மின் நிலையத்தில் 2 அணு உலைகளில் 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை தவிர மேலும் 4 அணு உலைகள் ரஷ்யா உதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன.

கூடங்குளத்தின் 3 ஆவது அணு உலைக்கு ஆரம்ப கட்ட நிரப்புதலுக்கான அணு எரிபொருளின் முதல் தொகுதியை வழங்கியுள்ளதாக ரஷ்ய அரசின் அணுசக்தி நிறுவனமான ரோசாட்டம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புடின் இந்தியா வந்துள்ள நிலையில், இத்தகவல் வெளி



யாகியுள்ளது.

ரஷ்யாவின் நோவோசி பிர்ஸ்க் கெமிக்கல் கான்சென்ட் ரேட்ஸ் ஆலையில் தயாரிக்கப் பட்ட இந்த எரிபொருளை ரோசாட்டம் அணு எரிபொருள் பிரிவால் இயக்கப்படும் ஒரு சரக்கு விமானம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக ரோசாட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3 ஆவது மற்றும் 4 ஆவது அணு உலைகளுக்கு முதல்கட்ட நிரப்புதலில் தொடங்கி அணு உலையின் உற்பத்தி காலம் முழுவதும் அணு எரிபொருள் வழங்க 2024 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. அதன் அடிப்படையில் ரஷ்யாவில் இருந்து 7 சரக்கு விமானங்கள் மூலம் எரிபொருள் அனுப்பி வைக்க திட்டமிடப் பட்டது. இதில் முதல் தொகுதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# விஜய் முன் த.வெ.கவில் இணைந்தார் மூத்த அரசியல்வாதி நாஞ்சில் சம்பத்

மூத்த அரசியல்வாதியும், பேச்சாளருமான நாஞ்சில் சம்பத், விஜய் முன்னிலையில் த.வெ.கவில் இணைந்துள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசும்போது,

"தமிழக வரலாற்றில் லட்சக்கணக்கான இளைஞர்களை மூலதனமாக வைத்துள்ள இயக்கம் த.வெ.க. நான் கடந்த 6 ஆண்டுகளாக என்னை எந்த அரசியல் கட்சியிலும் இணைத்துக் கொள்ளாமல் இருந்தேன். பெரியார், அண்ணா லட்சியங்களை பேசி வந்த நான் இன்று த.வெ.கவில் இணைந்துள்ளேன்

பா.ஜ.கவுடன் இணக்கமாக உள்ளீர்களா என விஜய்யிடம் கேட்டேன். ஆனால், விஜய் அதை மறுத்துவிட்டார். இங்கு அதிகாரத்தில் உள்ள கட்சியைக் கூர்மையாக விமர்சனம் செய்கிறேன்."" எனக் கூறினார்.

விஜய் அரசியல் கட்சி தொடங்குவதற்கு முன்னரே, பல்வேறு பேட்டிகளில், விஜய் அரசியல் கட்சித் தொடங்கினால், என்னை அழைத்தால் அரசியல் ஆலோசனைகள் வழங்குவேன் என்று அவர்





கூறியிருந்தார்.

எந்தக் கூட்டத்தில் பேசினாலும் தனது கம்பீரமான உரையால் பார்வையாளர்களை தன் வசம் இழுப்பதில் கைதேர்ந்தவர் நாஞ்சில் சம்பத். கல்லூரிக் காலத்திலேயே தன்னை தி.மு.கவில் இணைத்துக் கொண்டவர், அந்த காலத்திலேயே கருணாநிதியால் பாராட்டப்பட்டார். இருப்பினும் வைகோ மீதான ஈர்ப்பால் அவர் ம.தி.மு.கவைத் தொடங்கியபோது அவர் பின்னால் நின்றார்.

தொடர்ந்து வைகோவுடனும் மனக்கசப்பு வர, அ.தி.மு.கவில் ஐக்கியமானார். ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்பு தினகரன் அணிக்குச் சென்றவர், அ.ம.மு.க. உதயமானதும் கட்சியின் பெயரில் திராவிடம் இல்லை எனச் சொல்லி தினகரனை விட்டு விலகினார். பின்னர் திராவிடப் பேச்சாளர் என்னும் அடைமொழியோடு தி.மு.க. மேடைகளில் பேசினார். ஆனால் தி.மு.க. அவரை பெரிதாக அங்கீகரிக்கவில்லை. அதனை அவருமே வெளிப்படையாகப் பல்வேறு இடங்களில் ஆதங்கத்துடன் கூறி வந்தார்.

# காசி தமிழ்ச் சங்கமத்துக்கு 2,000 பொலிஸார் பாதுகாப்பு

உத்தர பிரதேசம் வாராணசியில் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி தொடர்ந்து நான்காவது ஆண்டாக கடந்த 2 ஆம் திகதி முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதில் சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து வாராணசி பொலிஸ் துணை ஆணையர் சரவணன் தங்க மணி தெரிவிக்கையில்,

"காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியில் 80,000 முதல் 1 லட்சம் பேர் வரை



கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை முன்னிட்டு இங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

சுமார் 2 ஆயிரம் பொலிஸார் 15 நாள்களாக பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். இதற்காக 3 கம்பெனி ரிசர்வ் பொலிஸார், தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் வரவழைக்கப்பட்டுள்ளனர். தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி நடைபெறும் நமோ காட் பகுதியை ஒட்டியுள்ள கங்கை நதியில் பாதுகாப்பு பணியை மேற்கொள்ள 4 அதிவிரைவு படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்தப் படகுகள் 8 கிலோ மீற்றர் தூரத்தை 7 நிமிடங்களில் கடந்து செல்லும். பாதுகாப்பு பணியில் 10 ட்ரோன்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன." என்று தெரிவித்தார்.



# இந்தியா - ரஷ்யா இடையே 16 ஒப்பந்தங்கள் கையெழுத்து

பிரதமர் மோடியை ரஷ்ய ஜனாதிபதி புடின் டில்லியில் நேற்று சந்தித்துப் பேசினார். அப்போது பொருளாதாரம், மனித வளம், உரம், கப்பல் கட்டுமானம் தொடர்பாக 16 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்திய, ரஷ்ய வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்க ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் இரவு டில்லி வந்தார். அன்றிரவு ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு பிரதமர் மோடி சிறப்பு விருந்து அளித்தார். அப்போது ரஷ்ய மொழியில் எழுதப்பட்ட பகவத் கீதையை புதினுக்கு அவர் பரிசாக வழங்கினார்.

இதைத் தொடர்ந்து குடியரசுத் தலைவர் மாளிகையில் புடினுக்கு நேற்று காலை 21 குண்டுகள் முழங்க இராணுவ மரியாதையுடன் சிவப்பு கம்பள வர வேற்பு அளிக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் மோடி அவரை வரவேற்றனர். இதன்பிறகு ஜனாதிபதி விளாடிமிர் புடின், காந்தி நினைவிடத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் டில்லியில் உள்ள ஹைத ராபாத் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடியும் ஜனாதிபதி விளாடிமிர் புடினும் அதிகாரப்பூர்வமாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது பிரதமர் மோடி கூறும் போது, "உக்ரைன் போர் விவகாரத்தில் இந்தியா நடுநிலையுடன் செயல்பட வில்லை. நாங்கள் அமைதியின் பக்கம் நிற்கிறோம். உக்ரைன் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்." என்று தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின் கூறும்போது, "உக்ரைன் போர் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். விரைவில் அமைதி தீர்வு காணப்படும்." என்று உறுதி அளித்தார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது 16 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத் தாகின. குறிப்பாக, இந்தியா – ரஷ்யா பொருளாதார ஒத்துழைப்பு திட்டம் 2030 தொடர்பான ஒப்பந்தம் கையெ முத்தானது. இதன்படி இரு நாடுகளும் இணைந்து கூட்டு தயாரிப்புகளில் ஈடுபட உள்ளன.



# ஃபிபாவின் 'அமைதிப் பரிசு' ட்ரம்புக்கு வழங்கப்பட்டது

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு ஃபிபாவின் அமைதிப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஃபிபா உலகக்கோப்பை உதை பந்து போட்டிக்கான போட்டிகள் அடுத்த ஆண்டு கனடா, மெக்சிகோ, அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

நோபல் அமைதிப் பரிசுக்காக பாகிஸ் தான், இஸ்ரேல் உள்ளிட்ட சில நாடுகள் டொனால்ட் ட்ரம்பை பரிந்துரை செய் தன. சுமார் 10 போர்களை நிறுத்தியதாக சொல்லிய ட்ரம்ப் வெளிப்படையாக அமைதிக்கான நோபல் பரிசுக்காக பிரச்சாரம் செய்தார். ஆனால் இறுதியில் அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோவுக்கு வழங்கப்பட்டது. அவர் பரிசைப் பெற்ற சிறிது நேரத்திலேயே, எங்கள் நோக்கத்திற்கான தீர்க்கமான ஆதரவுக்காக ட்ரம்ப்புக்கு இப்பரிசை அர்ப்பணிப்பதாகக் கூறினார்.

இந்தச் சூழலில் புதிதாக உரு வாக்கப்பட்ட ஃபிபா அமைதிப் பரிசு ட்ரம்ப்புக்கு நேற்று வழங்கப்பட்டது. ட்ரம்ப்பும், ஃபிபா தலைவர் கியானி இன்பான்டினோவும் நெருங்கிய நண் பர்கள் ஆவர். காசாவில் போர்நிறுத் தத்தை ஏற்படுத்தியதற்காக ட்ரம்ப், நோபல் அமைதிப் பரிசை வென்றிருக்க வேண்டும் என்று தான் நினைத்ததாக இன்பான்டினோ முன்னதாக தெரி வித்திருந்தார். ட்ரம்ப்புக்கு இந்த பரிசை வழங்கிய இன்பான்டினோ, "நீங்கள் அணியக் கூடிய உங்களுக்கான அழகான பதக கம்" என்று கூறினார்.

இதனையடுத்து, ட்ரம்ப் உடனடியாக அந்தப் பதக்கத்தை தனது கழுத்தில் அணிந்தார். "உலகம் முழுவதும் அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவ தற்கான அமெரிக்க ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது." என அவருக்கு வழங்கப்பட்ட சான்றிதழில் குறிப்பிடப் பட்டிருந்தது. உலகை உயர்த்திப் பிடிக்கும் கைகளை சித்தரிக்கும் தங்கக் கோப்பையும் அவருக்கு வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பேசிய இன்பான்டினோ, "இதுதான் ஒரு தலை வரிடமிருந்து, மக்களைப் பற்றி அக்கறை கொண்ட ஒரு தலை வரிடமிருந்து நாங்கள் விரும்புகிறோம். இது உங்கள் பரிசு, இது உங்கள் அமைதிப் பரிசு" என்று கூறினார்.

இந்த நிகழ்வில், தனது மனைவி மெலனியா ட்ரம்ப் உட்பட தனது குடும்பத்தினருக்கு நன்றி தெரிவித்த ட்ரம்ப், "இது உண்மையிலேயே என் வாழ்க்கையின் மிகப்பெரிய கவுர வங்களில் ஒன்றாகும்" என்று கூறினார்.

அமைதிக்கான அசாதாரண நடவடிக் கைகளை எடுத்து, அதன் மூலம் உலகம் முழுவதும் மக்களை ஒன்றிணைத்த தனிநபர்களுக்கு வெகுமதி அளிக்கும் ஒன்றாக ஃபிபா இந்தப் பரிசு பற்றி குறிப்பிட்டுள்ளது.

கனடா முரசு

சனிக்கிழமை 06/12/2025

## கனடாவில் அதிகரித்துள்ள புதிய வேலைவாய்ப்புக்கள்

கனடாவில் புதிய வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ள தாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விடயத்தை கனடிய புள்ளிவிபரவியல் 02



# வளர்ச்சியை நோக்கி நகரும் கனடாவின் பொருளாதாரம்

அமெரிக்காவின் சுங்க வரி பாதிப்பிற்கு பின்னும் கனடாவின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட நன்றாக செயல்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை சர்வதேச நாணய நிதியம் தனது புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கனடா, அமெரிக்கா மற்றும் மெக்சிகோ சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் உள்ள சில விலக்குகள் இந்த வர்த்தக மோதலின் பாதிப்பை குறைத்ததாக அறிக்கை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 02

# கனடாவில் மீளெடுக்கப்படுகின்ற குருதிசோதனை செய்யும் கருவிகள்

அமெரிக்காவை தளமாக கொண்ட அபோட் மருத்துவ உபகரண தயாரிப்பு நிறுவனம் தயாரிக்கும் நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் இரு குருதி சோதனை குறிகாட்டிகள் 16 நாடுகளில் பல மரணங்களுக்கு காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளதால் உடனடியாக மீளெடுக்கப்படுகின்றன.

அதன்படி, பிறிஸ்ரைல் லிப்ரே (FreeStyle Libre3) மற்றும் பிறி ஸ்ரைல் 3 பிளஸ் (FreeStyle Libre 3 Plus) ஆகிய குருதிசோதனை குறிகாட்டிகளே இவ்வாறு மீளெடுக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை இந்த சாதனங்கள் செயலிழந்ததால் 7 மரணங்கள் ஏற்பட்டமை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் ஒஸ்திரியா, பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, லக்சம்பர்க், நெதர்லாந்து, நியூசிலாந்து,




நோர்வே, ஸ்பெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து மற்றும் பிரித்தானியாவில் இந்த கருவிகள் மீளெடுப்படுகின்றன என குறிப்பிடப்படுகின்றது.

அதேபோல கனடாவிலும் குறித்த குருதிசோதனை கருவிகள் மீளெடுக்கப்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அமெரிக்காவில் மட்டும் சுமார் 30 லட்சம் குறைபாடுள்ள கருவிகள் மீளெடுக்கப்படுகின்றன என அபோட் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் இந்த சாதனங்களில் சில உண்மையாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை விட குறைந்த அளவில் தவறான அளவீடுகளை வழங்கியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்த கருவியின் செயலிழப்பு குறித்த 736 சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில், இதில் 7 மரணங்களும் அடங்குகின்றதாக கூறப்படுகின்றது.

நீரிழிவு நோயின் மேலாண்மைக்கு பயன்படுத்தப்படும் இந்த கருவிகள் குறித்த நோயாளியின் குருதியில் உள்ள சர்க்கையின் அளவை தொடர்ந்து கண்காணித்து, நோயாளிகளுக்கு இரத்தச் சர்க்கரைக் குறைவு அல்லது ஹைப்பர் கிளைசீமியாவின் அபாயத்தைத் தடுக்க உதவுவது குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிகளை வகைபடுத்தும் நடவடிக்கை மீளாய்வு செய்யப்படும்

## கரி ஆனந்த சங்கரி தெரிவிப்பு

கனடாவில் துப்பாக்கிகளை வகைப்படுத்தும் நடவடிக்கை மீளாய்வு செய்யப்படும் என பொதுப்பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

நாட்டின் துப்பாக்கி வகைப்படுத்தல் முறையை மீளாய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் அறிவித்துள்ளார்.

இந்த பரிசீலனையில் எஸ்.கே.எஸ் எனப்படும் அரை தானியங்கி துப்பாக்கியைப் பற்றிய ஆதிவாசி சமூகங்களுடனான ஆலோசனையும் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

எஸ்.கே.எஸ் துப்பாக்கிகளை ஆதிவாசிகள் உணவுத் தேவைக்கான வேட்டையாடல்களுக்காக பரவலாகப் பயன்படுகின்றனர்.

அதேசமயம், கடந்த சில ஆண்டுகளில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சாதாரண குடிமக்கள் உயிரிழந்த முக்கிய துப்பாக்கிச்சூடு சம்பவங்களிலும் இந்த ஆயுதம் பயன்படுத்தப்பட்டதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

1989 ஆம் ஆண்டு மானிட்ரியலில் நடந்த எகோல் பொலிடெக்னிக் படுகொலைக்குப் பிறகு உருவான பொலிசிசோவியன்ட் எனும் துப்பாக்கி கட்டுப்பாட்டு அமைப்பு, எஸ்.கே.எஸ் துப்பாக்கியைத் தடை செய்ய வேண்டும்



என்றும், ஆனால் உணவிற்கான வேட்டைக்காக பயன்படுத்தும் ஆதிவாசிகளுக்கு விதிவிலக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளது.

துப்பாக்கிகள், குண்டுகள், பத்திரங்கள் உள்ளிட்டவற்றின் சட்டக்கட்டமைப்பை எளிமைப்படுத்தும் தொடர் செயன்முறையை உறுதிப்படுத்தும் வகையில் விரிவாக மதிப்பீடு செய்வதாக அமைச்சர் கரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.




### கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கனடாவில் ஒரே மாதத்தில் 54,000 புதிய வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக சிறு அளவிலான வேலை இழப்பு ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் கணித்திருந்த நிலையில், வேலை வாய்ப்புகள் உயர்ந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலை இல்லா விகிதமும் ஒக்டோபரில் இருந்த 6.9 வீதத்தில் இலிருந்து நவம்பரில் 6.5 வீதமாக குறைந்துள்ளது.

இந்தநிலையில், செப்டம்பர் முதல் நவம்பர் வரை மொத்தம் 181,000 புதிய வேலைகள் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வளர்ச்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும், வேலை வாய்ப்பு மற்றும் முதலீட்டுப் போக்கு தளர்ந்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றது.

அத்தோடு, பொருள்களின் விலை சரிவு, வெளிநாட்டு கேள்வி குறைவு, குடியேற்றம் குறைவு மற்றும் சுங்க வரி நிச்சயமற்ற நிலை ஆகியவை கனடாவின் பொருளாதார வளர்ச்சியை தாமதப்படுத்தும் காரணங்களாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தநிலையில், வரும் மாதங்களில் பொருளாதார அபாயங்கள் சமநிலைப் படுத்தப்பட்டாலும் அதிகப்படியான நிச்சயமற்ற நிலை நீடிக்கும் என சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது.

இந்த அறிக்கை கனடா பொருளாதாரத்தைப் பொறுத்து சர்வதேச நாணய நிதியம் மேற்கொள்ளும் வழக்கமான மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கனடா அரசின் பாதீடு பொதுமக்கள் முதலீட்டை அதிகரிப்பது சரியான முடிவு என சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஓருவர் கொல்லப்பட்டுள்ளார்.

ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள கிரேட்டர் சட்பெரி பகுதியில் வெள்ளிக் கிழமை அதிகாலை ஏற்பட்ட மோதலில், ஆயுதம் ஏந்திய சந்தேக நபர் ஒருவர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

சம்பவம் கிளிண்டன் வீதியில் கொள்ளை முயற்சி தொடர்பாக பொலி ஸாருக்கு தகவல் வந்ததாக தெரிவிக் கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு விரைந்த அதி காரிகள், ஆயுதம் ஏந்திய ஒருவருடன் நேருக்கு நேர் மோதியுள்ளனர். அந்த நபர் அந்த மோதலின் போது உயிரிழந் துள்ளார் என பொலிஸார் அறிவித் துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுடன் பொலி ஸார் தொடர்புபட்டிருப்பதனால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

